2009 ஜூலை 2]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சுரங்கப் பாதையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் என்னிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். வருகின்ற 9 ஆம் தேதி நெடுஞ்சாலை மானியக் கோரிக்கை வரவிருக்கின்றது. எனவே, அதற்குப் பிறகு, இதுபற்றித் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

பாதுகாப்பு மிதவைகள்

***19466—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாகப் பாதுகாப்பு மிதவைகளை மானிய விலையில் மீனவர்களுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக மீனவர்களுக்கு மானிய விலையில் மிதவைகள் வழங்கும் திட்டம் தற்போது செயல்படுத்தப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாவது

முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலேதான், மீனவர் நல வாரியத்தை ஆரம்பித்து, இன்றைக்கு மிகப் பெரிய நலத் திட்டங்களையெல்லாம் அறிவித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல, இன்றைக்கு மீனவர்கள் எல்லாம் கடலுக்கு படகுகளிலே சென்று வருகிறபோது, அவ்வப்போது உயிரிழப்பு அதிகமாக ஏற்படுகின்றது. எனவே, அந்த உயிரிழப்பைத் தடுப்பதற்காக மானிய விலையிலே மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் பாதுகாப்பு மிதவைகள் வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா; மீண்டும் பரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக உயிர்க் காப்புக் கவச உடைகள் மானிய விலையில் ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்தாலும், குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மறு வாழ்விற்காக ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் தமிழக மீனவர்களுக்கு 1,28,311 உயிர்க் காப்புக் கவசங்கள் தமிழ்நாட்டின் அனைத்துக் கடலோர மாவட்டங்களிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இனி வருங்காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, மீனவர்களிடமிருந்து பாதுகாப்பு மிதவைகள் வழங்கவேண்டி கோரிக்கைகள் வரப்பெற்றால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞருடைய அரசு கனிவுடன் இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மீனவ மக்களுக்காகச் செயல்படுத்தக்கூடிய நலத் திட்டங்கள் என்னென்ன அறிவிக்கப்பட இருக்கின்றன என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவற்றை மானியக் கோரிக்கையிலே சொல்வார்.

2009 ஜூலை 2]

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கையிலே அவற்றை நான் குறிப்பிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

பால் குளிரூட்டும் நிலையங்கள்

***42338—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், காரப்பட்டு, கல்லாவி மற்றும் சிங்காரப்பேட்டையில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கல்லாவி, சிங்காரப்பேட்டை ஆகிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க மையங்களில் தொகுப்பு பால் குளிர்விப்பு மையங்கள் நிறுவக்கூடிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால், காரப்பட்டு கிராமத்தில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க தற்போதைக்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தில், காரப்பட்டு மையத்தைச் சுற்றியிருக்கக்கூடிய காரப்பட்டு, கீழ்மத்தூர், கே. பாப்பாரப்பட்டி, இராமகிருஷ்ணபதி, கதவணி,*